# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2008 நவம்பர் திங்கள் 28 –ாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் 2008–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

அ.குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 704: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்கள் அலுவலக விசயமாக கீழ்கண்ட மாதங்களில் பயணம் மேற்கொண்ட வகையில் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| மாதம் | தொகை |
|---|---|
| 10/2008 | ரூ. 1023/– |
| 11/2008 | ரூ. 1023/– |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 705: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 8/2008<br>9/2008<br>10/2008 | 2494/–<br>1500/–<br>1160/– |
| 2 | திரு. எஸ்.செல்வன் ஜார்ஜ் | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 8/2008<br>9/2008 | 945/–<br>930/– |
| 3 | திருமதி.எஸ், சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 9/2008<br>10/2008 | 1705/–<br>1462/– |
| 4 | திருமதி. அ.நிர்மலா ஜாய் | இளநிலை உதவியாளர் | 9/2008<br>10/2008 | 238–<br>61/– |
| 9 | திருமதி. மீனாம்பாள் | மகப்பேறு ஆயா | 8/2008<br>9/2008 | 147/–<br>98/– |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 706: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் 15.10.2008 முதல் 31.10.2008 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு.

(1) பொது நிதி : செலவுச்சீட்டு எண்கள் : 321, 323, 324, 325, 326, 328, 327, 329, 331, 333, 334, 336, 341, 342, 343, 346, 347, 348, 349, 352,

அ.குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 707: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

சுனாமி திட்டத்தின்கீழ் ஏ.வி.எம். சானலையொட்டி ஓடை அமைக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு கட்டமாக சைமன்காலனி பாலம் முதல் கடற்கரை வரையிலும் ஓடை அமைக்கப்படவுள்ளது. மேற்கண்ட இடத்தில் ஓடை அமைப்பதற்கு க.எண். 14–37/1 வீட்டு எண். 15/36A ஆகிய கட்டிடங்களையும் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் எண். 1 –ல் உள்ள சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடம் எண். 2–ல் உள்ள செப்டிக் டேங்க் ஆகியவற்றையும் இடித்து மாற்றி மீண்டும் கட்டுவதற்கும், மேற்கண்ட பணிகள் அனைத்தையும் செய்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பாக ரூ. 1,80,000/– னையும், மன்றம் தனது தீர்மானம் எண். 672 நாள் 03.10.2008 –ல் அங்கீகரித்ததன் அடிப்படையில் 31.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.T. ராதாகிருஷ்ணன் ஒப்பந்தக்காரர் ... 0.14% மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 1,73,503.00)

2) திரு.P.ஆரோக்கியதாஸ், ஒப்பந்தக்காரர் ... 3.87 % மதிப்பீட்டைவிட அதிகம். ( ரூ. 1,80,480.00)

இதில் திரு.T. ராதாகிருஷ்ணன் என்பவர் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T. ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 708: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

நகர்மன்றத் தீர்மானம் எண். 664 நாள் 23.09.2008–ல் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இக்பால் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல், சிமெண்ட் தளம் அமைத்தம் மற்றும் மேலத்தெரு குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல், துறைமுகத்தெருவில் படிப்பகம் அருகில் மழைநீர் வடிகால் ஓடை கட்டுதல் ஆகிய பணிகளையும் (SJSRY திட்ட ஒதுக்கீடு ரூ. 1,74,000/–) உத்தேச மதிப்பீடு ரூ. 1,75,000/– னையும், நகர்மன்றம் ஒப்புதலளித்ததன் அடிப்படையில் மூலப்பொருட்களை சப்ளை செய்வதற்கு 31.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.P.தங்கமணி, ஒப்பந்தக்காரர் ... 0.06% மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 1,31,537.00)

2) திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் ... 4.16 % மதிப்பீட்டைவிட அதிகம். ( ரூ. 1,37,080.00)

இதில் திரு.P.தங்கமணி என்பவர் 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.தங்கமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 709: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

நகர்மன்ற த் தீர்மானம் எண். 673 நாள் 03.10.2008–ல் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 10–ம் வார்டில் துறைமுகத்தெருவில் வீட்டு எண். 17/26 முதல் 17/22 வரையிலும் கழிவுநீர் ஓடை அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டதன் அடிப்படையில் 31.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.P.தங்கமணி, ஒப்பந்தக்காரர் ... 0.04% மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 24,829/–)

2) திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் ... 3.87 % மதிப்பீட்டைவிட அதிகம். ( ரூ. 25,801.00)

இதில் திரு.P.தங்கமணி என்பவர் **0.04%** மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 710: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் :8</u>

இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்வற்கு மாவட்ட ஆட்சித்லைவர் அவர்களது அலுவலகம் வழியாக 15 தினக்கூலி பணியாளர்கள் 20.12.2005 முதல் 15.09.2007 முடிய அனுமதி வழங்கப்பட்டு மேற்படி காலத்திற்கான ஊதியத் தொகையும் வழங்கப்பட்டது. முன்னாள் மாவட்ட ஆட்சியரால் அளித்த வாய்மொழி உத்தரவின்பேரில் இப்பணியிடங்கள் தொடர வேண்டிய அவசியம் இருப்பின் அதற்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பணியிடங்களின் சேவை இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியிலும், இந்நகரின் துாய்மைக்கு அத்தியாவசிய இன்றியமையாத தேவையாக இருப்பதால், இப்பணியிடங்களை 30.11.2008 வரை நீட்டிப்பு செய்து ஊதியம் வழங்க மன்றம் தனது தீர்மான எண்.643 நாள் 29.08.2008–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிலையில் மேற்காண் பணியிடங்களை தொடர்ந்து நீட்டித்தால் தணிக்கைத் தடை எழக்கூடும். இதனால் நிர்வாக சிக்கல் எழக்கூடும். மேலும் நகராட்சியின் பொது நிதி போதிய திருப்திகரமானதாக இல்லை. எனவே 30.11.2008–க்கு பின் இப்பணியிடங்கள் நீட்டிக்க இயலாது என்பதால் 30.11.2008 வுடன் முடிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 711. சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சுகாதாரப்பணிகளை மேற்கொள்வதற்கு தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள 10 நபர்களின் பணி மிகவும் தேவை. இல்லையேல் மிகப்பெரிய சுகாதாரக் கேடு உருவாகும் சூழ்நிலை ஏற்படும். பிப்ரவரி 2009 தேதிக்குள்** Norms படியான துப்புரவு பணியாளர்கள் குளச்சல் நகராட்சிக்கு கூடுதலாக **நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதால் 2009 பிப்ரவரி 28ஆம் நாள்வரை இப்பணியிடங்களை நீட்டிப்பு செய்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் :9</u>

2008–2009–ம் நிதியாண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான எழுதுபொருட்கள் வாங்குவதற்கும் மற்றும் படிவங்கள் அச்சடிப்பதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டடப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 712: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 நவம்பர் திங்கள் 28 –ாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட குளச்சல் பிரதான சாலையில் ஜேம்ஸ் மருத்துவமனை எதிரில் ரோட்டில் கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால் அப்பகுதிகளில் பொதுமக்கள் சென்று வர இடையூறாக இருந்ததின் காரணமாக அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அ.னுமதி பெற்று உறிஞ்சி லாரிகள் மூலம் தேங்கிய கழிவுநீரை வெளியேற்றியமைக்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 21,000/– க்கும், சம்மந்தப்பட்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் , மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(2) அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 10.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 713: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சி ஜேம்ஸ் மருத்துவமனை எதிரில் ரோட்டில் கழிவுநீர் தேங்கியுள்ளதன் காரணமாக அவசர அவசரமாக போர்க்கால அடிப்படையில் உறிஞ்சி லாரிகள் மூலம் அதனை வெளியேற்ற நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 10.11.2008 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன்பேரில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வின்வருமாறு :

(1) T.கல்யாணி, செப்டிக் டேங்க் கிளீனிங, மார்த்தாண்டம். : ரூ. 3500/– (Trip )

(2) திரு. உதயகுமார், ஏர் கம்ப்ரஸர் செப்டிக் டேங்க் கிளீனிங, நாகர்கோவில். : ரூ. 3000/– (Trip )

இதில் திரு. உதயகுமார், ஏர் கம்ப்ரஸர் செப்டிக் டேங்க் கிளீனிங, நாகர்கோவில். என்பவர் ஒரு டிரிப்பிற்கு ரூ. 3000/– என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. உதயகுமார், ஏர் கம்ப்ரஸர் செப்டிக் டேங்க் கிளீனிங,, நாகர்கோவில் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 714: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 12 ஆழ்துழாய் கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. தினமும் நகரில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்வதின் காரணமாக சம்மந்தப்பட்ட போர்வெல்களில் உள்ள மோட்டார்கள் மற்றும் குழாய்களிலும் ஓட்டை விழுகின்றது. இதனை சரி செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 92,000/– க்கும் மன்றம் தனது தீர்மானம் எண். 680 நாள் 31.10.2008–ல் ஒப்புதல் அளித்ததன் பேரில் 25.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C.சந்திரசேகர் . . . 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர்

2) திரு.P.தங்கமணி, . . . 44.80% மதிப்பீட்டைவிட அதிகம்
ஒப்பந்தக்காரர்

இதில் திரு.C.சந்திரசேகர் என்பவர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 715: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

குளச்சல் நகரப் பகுதிகளில் மின்வெட்டு காரணமாக அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. குறிப்பாக மாலை மற்றும் இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனால் வெளிச்சம் இல்லாததால் அலுவலகப் பணிகள் பாதிப்படைகிறது. எனவே அலுவலகப்பணிகள் பாதிக்கா வண்ணம் நகர்மன்றத் தலைவர் அறை, ஆணையர் அறை, பொறியாளர் அறை, மேலாளர் அறை, நகர்மன்ற உறுப்பினர்களின் அறை மற்றும் கணினி பிரிவு ஆகிய இடங்களில் மின்தடை ஏற்படா வண்ணம் ஒயரிங் செய்து 1400 VA Capacity கொண்ட இன்வெர்ட்டர் அமைப்பதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000/–க்கும் சம்மந்தப்பட்ட பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மன்றம் ஒப்புதல் செய்யலாம்.
(3) அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 25.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் பின்னேற்பு வழுஙகலாம்.

**தீர்மானம் எண். 716: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகரப் பகுதிகளில் மின்வெட்டு காரணமாக அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. குறிப்பாக மாலை மற்றும் இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. இதனால் வெளிச்சம் இல்லாததால் அலுவலகப் பணிகள் பாதிப்படைகிறது. எனவே மின்தடை ஏற்படா வண்ணம் ஒயரிங் செய்து 1400 VA Capacity கொண்ட இன்வெர்ட்டர் அமைப்பதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000/–க்கும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 25.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வின்வருமாறு :

(1) திரு. S. பெஞ்சமின் பிராஙகிளின்,
M/S,மோரீஸ் இன்வெர்ட்டர்,
காந்தி ஜங்சன், குளச்சல்.

(2) திரு. K. ரவிராஜ்,
நாஞ்சில் கண்ட்ரோலர் சிஸ்டம்,
17/62, ராஜீவ்காந்தி சிலை அருகில்,
கருங்கல்.

இதில் திரு. S. பெஞ்சமின் பிராஙகிளின் அவர்களின் நிறுவனமான மோரீஸ் இன்வெர்ட்டர் .ரூ.29,200/–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. S. பெஞ்சமின் பிராஙகிளின், மோரீஸ் இன்வெர்ட்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். அதை D.G.S.T. ரேட் விகிதத்தில் வழஙகவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 717: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 6</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலைய வளாகத்தில் சிமென்ட் காங்கிரீட் கூரையால் பல இடங்களில் மழைநீர் கசிவு ஏற்படுகிறது. இதனால் பல இடங்களில் காங்கிரீட் பெயர்ந்து கீழே விழுந்துள்ளன. மேலும் பல இடங்களில் மேல் கூரை காங்கிரீட்டானது பெயர்ந்து காணப்படுகின்றது. இதனால் கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ள வியாபாரிகள் மழைநீர் கசிவினால் தங்கள் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்கள் நாசமாகி வருவதாக புகார் தெரிவித்துள்ளனர். மேலும் கூரை பெயர்ந்து காணப்படுவதால் பொதுமக்களுக்கும் அபாயம் விளைவிக்கக் கூடும். எனவே சம்மந்தப்பட்ட பகுதி முழுவதையும் சீரமைக்கவும், கூரையின் மேற்பகுதியில் உள்ள பழுதுகளை சரி செய்யவும், கட்டிடம் முழுவதையும் வர்ணம் பூசவும் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4,50,000/—க்கும் சம்மந்தப்பட்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 718: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 7</u>**

நகர்மன்றத் தீர்மானம் எண். 678 நாள் 31.10.2008—ல் இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு லாரி எண். TN-74 Z 2339—க்கு தகுதிச் சான்று பெறுவதற்காக மேற்படி லாரியிலுள்ள அனைத்து பழுதுகளையும் சரி செய்தும், பெயின்டிங செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.17,000/—க்கும் சம்மந்தப்பட்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் ஒப்புதலளித்ததன் அடிப்படையில் 18.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

(1) M/s. மணி மோட்டார் ஒர்க்ஸ், : ரூ. 16,925/—
ஒழுகினசேரி, நாகர்கோவில்.

(2) M/s.K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ், : ரூ. 17,770/—
ஆசாரிப்பள்ளம் ரோடு.
நாகர்கோவில்.

இதில் M/s.மணி மோட்டார்ஸ், நாகர்கோவில் என்ற நிறுவனத்தார் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** :குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.மணி மோட்டார்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 719: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 8</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்திருக்கும் வணிக வளாகங்களின் நுழைவு வாயில்கள் மற்றும் சந்தையின் முன்புறம் மற்றும் பின்பக்கம் ஆகிய பகுதிகளிலும் கேட்டுகள் அமைப்பதற்கும், கழிப்பிடம் கட்டுவதற்கும் ரூ. 1,30,000/— மதிப்பீட்டில் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சிவதாணுமாலையன் என்பவருக்கு கடந்த 29.02.2008—ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 15.04.2008—க்குள் பணி முடிக்கவும் தெரிவிக்கப்பட்டது. சம்மந்தப்பட்டவர் பணியினை தொடங்காமல் காலந்தாழ்த்தியதன் காரணமாக நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 698 நாள் 31.10.2008—ல் அன்னாரை கருப்பு பட்டியலில் சேர்த்தும், வழங்கப்பட்ட பணி உத்தரவினை ரத்து செய்தும் தீர்மானம் நிறைவேற்றியதன் அடிப்படையில் அன்னாரை கருப்புப் பட்டியலில் சேர்த்தும், வழங்கப்பட்ட பணி உத்தரவினை ரத்து செய்தும் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இவ்வேலைக்கான மதிப்பீடு 2007—2008—ம் ஆண்டு விலை விகிதப்படி தயார் செய்யப்பட்டது. தற்போது 2008—2009—ம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை விகிதப்படி மதிப்பீடு ரூ. 1.45 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதிகளில் கேட் அமைக்கும் பணி மற்றும் கழிப்பிடம் கட்டும் பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.45 லட்சத்திற்கும்

சம்மந்தப்பட்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : (1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(2)மறு டெண்டர் கோருவதால் ஏற்படும் வித்தியாச தொகையினை ஒப்பந்தக்காரரிடமிருந்து வசூலிக்கவோ, அல்லது வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யவோ அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 720: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 9</u>

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு கடையினை ரூ. 20,000/– முன்வைப்பு தொகையுடனும், மாத வாடகையினை பொது ஏலத்தில் விடுவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 721: அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 10</u>

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தின் மேற்கூரையானது சிமெண்ட் பூச்சு பெயர்ந்து காணப்படுவதால் நீர்கசிவு ஏற்பட்டு கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் அதனை சரி செய்வதற்கு உத்தேசமாக ரூ.4.50 லட்சம் தேவைப்படுகிறது. மேற்படி தொகையினை செலவு செய்வதற்கு இந்நகராட்சியின் பொது நிதியில் போதியளவில் நிதி இல்லாத காரணத்தால் பஸ் ஸ்டாண்ட் கடைகளின் குத்தகைதாரர்களிடமிருந்து கூடுதல் டெபாசிட்டாக ரூ.10,000/– வீதம் உயர்த்தி வசூலிப்பதற்கு மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. ( கடை எண். 1 முதல் 7 வரை மற்றும் 9 முதல் 29 வரை)

<u>அ.குறிப்பு</u> : மேற்காண் கடைகளுக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1114 நாள் 24.08.2005–ன்படி வைப்புத் தொகையினை உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டதின்படி வசூலிக்கப்பட்டுள்ளது

கடை எண். 1 முதல் 6 மற்றும் 9 முதல் 16 வரை – ரூ. 40,000/–<br>
கடை எண். 7 மற்றும் 17 முதல் 25 வரை – ரூ. 25,000/–<br>
கடை எண். 19 முதல் 22, மற்றும் 26 முதல் 29 வரை – ரூ. 15,000/–

எனவே வைப்புத் தொகையினை மீண்டும் உயர்த்துவது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 722: பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளின் டெப்பாசிட் தொகையினை ரூ.10000/– வீதம் கட்டுவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்<br>
குளச்சல் நகர்மன்றம்